# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-9 - நீராய்
## (கேட்டவர்கள் நெஞ்சு நீராய்க் கரையவும், திருமாலுக்கும் பரமபதத்தில் இருப்பு அரிதாகவும், ஆழ்வார் ஆராத காதலுடன் கூப்பிடுதல்)

3315 * நீராய் நிலனாய்த் * தீயாய்க் காலாய் நெடுவானாய் *
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் * சிவனாய் அயனானாய்! **
கூராராழி வெண்சங்கு ஏந்திக் * கொடியேன் பால்
வாராய் * ஒரு நாள் * மண்ணும் விண்ணும் மகிழவே 1

3316 மண்ணும் விண்ணும் மகிழக் * குறளாய் வலங்காட்டி *
மண்ணும் விண்ணும் கொண்ட * மாய அம்மானே! **
நண்ணி உனை நான் * கண்டுகந்து கூத்தாட *
நண்ணி ஒரு நாள் * ஞாலத்தூடே நடவாயே 2

3317 ஞாலத்தூடே நடந்தும் நின்றும் * கிடந்திருந்தும் *
சாலப் பல நாள் * உகந்தோறு உயிர்கள் காப்பானே! **
கோலத் திருமாமகளோடு * உன்னைக் கூடாதே *
சாலப் பல நாள் * அடியேன் இன்னம் தளர்வேனோ? 3

3318 தளர்ந்தும் முறிந்தும் * சகட அசுரர் உடல் வேறா *
பிளந்து வீயத் * திருக்கால் ஆண்ட பெருமானே! **
கிளர்ந்து பிரமன் சிவன் * இந்திரன் விண்ணவர் சூழ *
விளங்க ஒரு நாள் * காண வாராய் விண்மீதே 4

3319 விண்மீது இருப்பாய்! மலைமேல் நிற்பாய்! * கடல் சேர்ப்பாய்! *
மண்மீது உழல்வாய்! * இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்! **
எண்மீது இயன்ற புறவண்டத்தாய்! * எனதாவி *
உள்மீதாடி * உருக்காட்டாதே ஒளிப்பாயோ? 5

3320 பாயோர் அடி வைத்து அதன் கீழ்ப் * பரவை நிலம் எல்லாம்
தாய் * ஓர் அடியால் * எல்லா உலகும் தடவந்த
மாயோன்! ** உன்னைக் காண்பான் * வருந்தி எனை நாளும் *
தீயோடு உடன்சேர் மெழுகாய் * உலகில் திரிவேனோ? 6

3321 உலகில் திரியும் கரும கதியாய் * உலகமாய் *
உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய்! * புறவண்டத்து **
அலகில் பொலிந்த * திசை பத்தாய அருவேயோ! *
அலகில் பொலிந்த * அறிவிலேனுக்கு அருளாயே 7

3322 அறிவிலேனுக்கு அருளாய் * அறிவார் உயிரானாய்! *
வெறிகொள் சோதி மூர்த்தி! * அடியேன் நெடுமாலே! **

கிறிசெய்து என்னைப் புறத்திட்டு * இன்னம் கெடுப்பாயோ? *
பிறிதொன்று அறியா அடியேன் * ஆவி திகைக்கவே 8

3323 ஆவி திகைக்க * ஐவர் குமைக்கும் சிற்றின்பம் *
பாவியேனைப் * பல நீ காட்டிப் படுப்பாயோ? **
தாவி வையம் கொண்ட * தடந்தாமரைகட்கே *
கூவிக் கொள்ளும் காலம் * இன்னம் குறுகாதோ? 9

3324 குறுகா நீளா * இறுதி கூடா எனை ஊழி *
சிறுகா பெருகா * அளவில் இன்பம் சேர்ந்தாலும் **
மறுகால் இன்றி மாயோன் * உனக்கே ஆளாகும் *
சிறுகாலத்தை உறுமோ? * அந்தோ! தெரியிலே 10

3325 * தெரிதல் நினைதல் * எண்ணல் ஆகாத் திருமாலுக்கு *
உரிய தொண்டர் தொண்டர் * தொண்டன் சடகோபன் **
தெரியச் சொன்ன * ஓராயிரத்துள் இப்பத்தும் *
உரிய தொண்டர் ஆக்கும் * உலகம் உண்டாற்கே 11

**அடிவரவு:** நீர் மண் ஞாலம் தளர்ந்து விண் பாய் உலகு அறிவு
ஆவி குறுகா தெரிதல் உலகம்